# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2412 - 2024 නොවැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2024.11.22

*2412 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 844 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2024, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு - மேல் மாகாணம்

மேல் மாகாணத்தில் மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களுக்கு கல்விமாணி பட்டதாரிகளை இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பம் கோரல் - 2024

மேல் மாகாணத்தில் மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் சேவை வெற்றிடங்களுக்காக மேல் மாகாண அரச சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாக கொண்ட கல்விமாணி பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலமான பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இவ்வாட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதோடு நிலவுகின்ற ஏற்பாடுகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தொகை தீர்மானிக்கப்படும். நேர்முகத் தேர்வின் போது தகைமைபெறும் விண்ணப்பதாரிகள் பிரயோகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு அப்பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளுள் முழுத்திறமை ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. **சம்பளத் திட்டம்**

2022.01.05 ஆந் திகதி கொண்ட அரசாங்க நிருவாக சுற்றுநிருபம் 03/ 2016 (IV) இன் படி இப்பதவிக்குரிய மாதாந்த சம்பளத்திட்டம் அளவு G.E. - 02-2016 ஏ எனும் சம்பள வகுதிக்குரிய ரூபா: 39,175 - 10x825 - 7 x1,335 - 20x 1,630 - ரூபா 89,370 ஆகும். தாங்கள் இச்சம்பள அளவுத்திட்டத்தின் 3 ஆம் படி நிலையாகிய ரூபா. 40,825/- இல் அமர்த்தப்படுவீர்கள். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**

**3.1.கல்வித் தகைமைகள்**

i. கற்றல் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட சிறப்புத் துறைகளுக்குரிய, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்ட கல்விமாணி பட்டமாக இருத்தல் வேண்டும். இப்பட்டமானது தகைமைகள் பரிசீலனை செய்யப்படும் திகதிக்கு (2024.07.31) முன்னர் வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

ii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முறையில் தாய்மொழி மற்றும் கணித பாட சித்திகளுடன் மூன்று திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (ஒரே தடவையில் ஆகக் குறைந்தது 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)

அத்துடன்

iii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் (03) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மிகவும் முக்கியமானவை** : (விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை)

- தாங்கள் பெற்றுக்கொண்டுள்ள பட்டத்திற்கமைய விண்ணப்பிக்கக் கூடிய பாடம் மற்றும் மொழிமூலம் தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனமெடுத்தல் வேண்டும். (உப அட்டவணை 01 மற்றும் 02)

- தேர்ச்சி பெற்றுள்ள பாடத்திற்கு மாத்திரம் ஆசிரியர் வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

- ஒரு பாடத்திற்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
- விண்ணப்பிக்கின்ற பாடம் மற்றும் மொழி மூலத்தை எக்காரணத்தைக் கொண்டும் பின்னர் மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.
- தாங்கள் விண்ணப்பிக்கும் பாடத்தை தங்களுடைய கல்விமாணி பட்டத்தில் பயின்றுள்ளீர்கள் என்பதனை பல்கலைக்கழகத்தினூடாக உறுதிப்படுத்திய கடிதத்தினையும், அப்பாடத்துடன் தொடர்புடைய ஆசிரிய பயிற்சியினை மேற்கொண்டுள்ளீர்கள் என்பதனை உறுதிப்படுத்திய கடிதத்தினையும் நேர்முகத்தேர்வின்போது சமர்பித்தல் கட்டயாமனதாகும்.

**3.2. உடல் உள ஆரோக்கியம்**

சகல விண்ணப்பதாரிகளும் ஆசிரியராக கடமையாற்றுவதற்கு பொருத்தமான உள மற்றும் உடல் ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**3.3. வயது**

தகைமைகள் கருத்திற் கொள்ளப்படும் திகதியன்று (2024.07.31) 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3.4. ஏனைய தகைமைகள்

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராயிருத்தல் வேண்டும்.
III. வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத் துணை, விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னரான 03 வருடங்களுக்கு குறையாத காலங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராயிருத்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்தரினால் விநியோகிக்கப்படுகின்ற வதிவிடம் தொடர்பான சான்றிதழ் (டி.எஸ்-04) மூலம் நேர்முகத் தேர்வின்போது வதிவிடத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**4. சேவை நிபந்தனைகள்**

I. அரச/மாகாண அரச சேவை நியமனங்களை கட்டுப்படுத்துகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும், மேல்மாகாண அரச சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டவாறு தெரிவு செய்யப்படுகின்ற பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு நியமிக்கப்படுவார்கள்.

II. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது. இப்பதவிக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு முறைமை தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனம் பெறுபவர்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

III. இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்கள்.

IV. மேல் மாகாண அரச சேவையில், ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்படும்.

V. 2020.10.16ஆம் திகதி கொண்ட அ.நி.சு:18/2020 மற்றும் அவ்வப்போது இவற்றில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய, பரிந்துரைக்கப்பட்டுள்ளவாறு இரண்டாம் தேசிய மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5. ஆட்சேர்ப்புச் செய்தல்**

**5.1. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறைமை**

2008.07.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறையிலுள்ள மேல்மாகாண அரச சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.3.5 ஆகிய விதிமுறைகளுக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

தேர்வுசெய்யும் பொருட்டு பொதுவான நேர்முகப் பரீட்சையொன்றும் பிரயோகப் பரீட்சையொன்றும் நடாத்தப்படும்.

பொதுவான நேர்முகப் பரீட்சையில் தகைமைபெறும் விண்ணப்பதாரிகள் பிரயோகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். (ஆசிரியர் சேவை பிரமாணக குறிப்பின் (அ) பிரிவு வலுவிலிருக்கும்)

பிரயோகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளில், திறமையின் அடிப்படையில் உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**5.2. பொதுவான நேர்முகப் பரீட்சை :**

சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கமைய வெளியிடப்படுகின்ற வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதனையும் உடற் தகுதியினையும் பரிசீலனை செய்தல்.

**5.3. பிரயோகப் பரீட்சை :**

பிரயோகப் பரீட்சையின்போது, விண்ணப்பதாரியினால் இனங்காணப்படும் ஒரு தலைப்பின் கீழ் சமர்பிப்பு ஒன்றை முன்வைத்தல் வேண்டும். இதற்கான புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும்.

| தொடரிலக்கம் | பிரயோக பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் நியமங்கள் | உயர்ந்த பட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | குறிக்கோள் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடல் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | முன்வைத்தல் நுட்பமுறைகளின் பயன்பாடு | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | 10 |

**5.4. பிரயோக பரீட்சை முறைமை:**

I. பிரயோக பரீட்சைக்காக ஐந்து (05) நிமிடங்களுக்குக் குறையாத நேரம் வழங்கப்படும்.
II. பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகூடிய புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.
III. பிரயோக பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு நியமங்களிலும் ஆகக் குறைந்தது இரண்டு (02) புள்ளிகள் வீதம் பெறல் வேண்டும்.
IV. பிரயோக பரீட்சை மதிப்பீடு மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பிரயோக பரீட்சைக் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும்.

**5.5.நியமங்களின் நோக்கம்**

ஆசிரிய தொழிலில் மிகவும் முக்கியமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் திறமைகளை அளவிடல்.

I. **குறிக்கோள் மற்றும் பிரவேசம்**

வெற்றிகரமாகப் பாடத்தின் நோக்கத்தினை விளக்குதல் மற்றும் பாடப் பிரவேசம் செய்யும் திறமையினை மதிப்பிடல்

II. **ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு**

ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையுடன் காணப்படல் மற்றும் கற்பித்தலின்போது சிறப்பான முறையில் குரலினைக் கட்டுப்படுத்துவதற்குள்ள திறமையினை மதிப்பிடல்

III. **தொடர்பாடல் தெளிவு**

கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் உரிய விடயங்களை விளைதிறனான முறையில் தெரிவிக்கும் திறமையினை மதிப்பிடல்

IV. **நேர முகாமைத்துவம்**

வழங்கப்படும் காலப்பகுதியினுள் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் திறமையினை மதிப்பிடல்.

IV. **முன்வைத்தல் நுட்பமுறைகளின் பயன்பாடு**
நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக முன்வைத்தல் நுட்பமுறைகளை சிறப்பாகப் பயன்படுத்தும் திறமையினை மதிப்பிடல்.

**6. விண்ணப்பிக்கும் முறை :**

I. சகல விண்ணப்பதாரிகளும் www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குப் பிரவேசித்து இப்பரீட்சை அறிவித்தலுக்கமைய உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள (Upload) விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கிக் கொள்ள முடியும்.

II. உரிய தகவல்களை வழங்கி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும்போது தரப்பட்டுள்ள உப அட்டவணை 01 மற்றும் 02 னை பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

III. முழுமையற்ற வகையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும், அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தி அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாக அமையும்.

IV. விண்ணப்பிக்கும் பாடத்தை பின்னர் மாற்றுவதற்கு எக்காரணத்தைக் கொண்டும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. அத்துடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவத்துடன் எவ்வித சான்றிதழும் இணைத்து அனுப்பப்படலாகாது.

V. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் நிறுவனத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் சான்றுப்படுத்தப்பட்டிருப்பதோடு அவ்விண்ணப்பம் நிறுவனத் தலைவரின் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளது கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபர், பிரதேச கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் ஆணையதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது ரூ. 498,960/- அல்லது அதற்கு மேலான வருடாந்த அடிப்படைச் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது பிற மத வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பான அல்லது கருதத்தக்க அளவிலான நிலையிலிருக்கும் ஒரு மதகுரு ஆகியோரில் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

VI. நிகழ்நிலை மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2024.12.08 ஆகும்

VII. எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குப் பிரவேசித்து, 2024.12.08 ஆம் திகதிக்கு முன்னர் நிகழ்நிலை மூலம் விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். சரியாக பூரணப்படுத்தி தரவிறக்கிக்கொண்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை இட்டு அக்கையொப்பத்தினை சான்றுப்படுத்திய பின் 2024.12.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

செயலாளர், (ஆட்சேர்ப்புக் கிளை)
மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இலக்கம் 628, 10 ஆம் மாடி,
ஜனஜய சிட்டி கட்டிடம்,
நாவல வீதி, இராஜகிரிய.

விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '**கல்விமாணிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2 தரம் ஐஐ இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பம் கோரல் - 2024**' எனக் குறிப்பிடுதல் கட்டாயமானதாகும்.

VIII. விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புடைய கடிதம் தபாலில் தொலைந்து போனதாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தினை காலதாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரியே தாங்கிக் கொள்ளல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவம் கிடைத்தமை தொடர்பில் அறியத் தரப்படமாட்டாது.

7. தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவம் எக்காரணத்தைக் கொண்டும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

8. இவ்வறிவித்தலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் யாதேனுமிருப்பின் அவை தொடர்பில் தீர்மானமெடுக்கும் உரிமையும் வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடுதல் தொடர்பான இறுதி தீர்மானத்தை எடுக்கும் உரிமை மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு. அத்துடன் இவ்வாட்சேர்ப்பினை பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது பரீட்சைகளை நடாத்திய பின் தேர்ந்தெடுத்தல் /தேர்ந்தெடுக்காதிருத்தல் தொடர்பான இறுதித் தீர்மானமும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு.

9. விண்ணப்பதாரிகளை நேர்முகத் தேர்விற்கு அழைப்பதற்கான அறிவித்தல், அழைப்புக் கடிதம் மற்றும் நேர்முகப் பரீட்சைக்கான கால அட்டவணை என்பன மேல்மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் www.psc.wp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். இது குறித்து, உத்தியோகபூர்வ குறுந்தகவலின் மூலம் தாங்கள் அறியப்படுத்தப்படுவீர்கள்.

10. வெளியிடப்படுகின்ற அறிவித்தலுக்கமைய, நேர்முகப்பரீட்சைக்கான கால அட்டவணையில் தங்களுடைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பின், அது குறித்து மேல்மாகாண அரச சேவை ஆணைக்குழுவில் விசாரிக்க முடியும். அச்சந்தர்ப்பத்தில் தங்களால் தரவிறக்கிக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தங்கள்வசம் வைத்திருத்தல் பயனுடையதாக அமையும்.

11. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முன்கூட்டிய முடிவினடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது முன்பதாக சரியான முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார்கள் என்ற அனுமானத்தின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படலானது தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனக் கருதப்படலாகாது. அதேவேளை விண்ணப்பதாரியினால் தகைமைகள் பூர்த்திசெய்யப்படவில்லை என கண்டறியப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கும் நியமனம் வழங்குவதனை நிராகரிப்பதற்குமான அதிகாரம் மேல்மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

12. குறித்த திகதியில் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்காத விண்ணப்பதாரிகள் எந்தவகையிலும் மறுபரிசீலனை செய்யப்பட மாட்டார்கள். அத்துடன் நேர்முகப் பரீட்சையன்று அனைத்து சான்றிதழ்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் யாதேனும் பொருத்தப்பாடின்மை ஏற்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலே சரியானதெனக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத் திகதி தொடக்கம் 14 நாட்களுக்குள் கடமையினை பொறுப்பேற்றல் வேண்டும். அவ்வாறில்லையெனில் எவ்வித அறிவித்தலுமின்றி நியமனம் இரத்துச் செய்யப்படும்.

திலக் செனரத்,
செயலாளர்.

அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்,
2024.11.22.

**உப அட்டவணை 01**

| மொழி மூலம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| சிங்களம் | 1 |
| தமிழ் | 2 |
| ஆங்கிலம் | 3 |

**உப அட்டவணை 01**

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 01 | ஆரம்பக் கல்வி | க.பொ.த. உயர்தரத்தில் தாய் மொழியை பாடமொன்றாகக் கொண்டு சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தில் தாய் மொழியினை பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 02 | ஆங்கிலம் | உரிய பாடத்தினை க.பொ.த.(உயர்தர) பாடமொன்றாக/பாடத்துறையாக கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தில் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 03 | நடனம் (தேசியம்) | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 04 | சங்கீதம் (கீழைத்தேயம்) | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 05 | விஞ்ஞானம் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 06 | கணிதம் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 07 | சிங்களம் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 08 | தமிழ் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 09. | வரலாறு | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 10 | பௌத்த சமயம் | க.பொ.த. உயர்தரத்தில் பௌத்த சமயம் அல்லது பௌத்த நாகரிகத்தினை பின்பற்றி அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 11 | இந்து சமயம் | க.பொ.த. உயர்தரத்தில் இந்து சமயம் அல்லது இந்து நாகரிகத்தினை பின்பற்றி அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 12 | இஸ்லாம் | க.பொ.த. உயர்தரத்தில் இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரிகத்தினை பின்பற்றி அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 13 | றோமன் கத்தோலிக்கம் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 14 | கிறிஸ்தவம் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 15 | புவியியல் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 16 | குடியுரிமைக் கல்வி | க.பொ.த. உயர்தர பாடமொன்றாக அரசியல் விஞ்ஞான பாடத்தினை பின்பற்றி அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 17 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 18 | முயற்சியாண்மைக் கல்வி | க.பொ.த. உயர்தரத்தில் வணிகத்துறை பாடத்தினை பின்பற்றியிருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 19 | ஹிந்தி | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 20 | அரபு | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 21 | சீன மொழி | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 22 | ஜேர்மன் | உரிய பாடத்தினை க.பொ.த (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 23 | ஜப்பான் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 24 | பிரெஞ்சு | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 25 | கொரியன் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 26 | இரண்டாம் மொழி (சிங்களம்) | க.பொ.த. (சாதாரண) தரத்தில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்திற்கு A சித்தியினைப் பெற்றிருப்பதோடு க.பொ.த. உயர்தரத்தில் யாதேனுமொரு துறையில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் குறித்த பாடத்தைக் கற்றிருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 27 | இரண்டாம் மொழி (தமிழ்) | க.பொ.த. (சாதாரண) தரத்தில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடத்திற்கு A சித்தியினைப் பெற்றிருப்பதோடு க.பொ.த. உயர்தரத்தில் யாதேனுமொரு துறையில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 28 | சங்கீதம் (மேலைத்தேயம்) | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 29 | சங்கீதம் (கர்நாடகம்) | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 30 | சித்திரம் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 31 | நாட்டியம் (பரதம்) | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 32 | நாடகமும் அரங்கியலும் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 33 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 34 | விவசாயமும் உணவு தொழினுட்பவியலும் | க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் துறை அல்லது உயிர்முறைமைகள் தொழினுட்ப துறையில் விவசாய விஞ்ஞானத்தை பாடமொன்றாகக் கொண்டு சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 35 | நுட்பக்கலை | க.பொ.த சாதாரண தரத்தில் நுட்பக்கலை பாடத்திற்கு A சித்தியினை பெற்றிருப்பதோடு க.பொ.த உயர்தரத்தில் யாதேனுமொரு துறையில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தினை பூர்த்தி செய்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 36 | மனைப்பொருளியல் | க.பொ.த. சாதாரண தரத்தில் மனைப்பொருளியல் பாடத்திற்கு A சித்தியினை பெற்றிருப்பதோடு க.பொ.த. உயர்தரத்தில் யாதேனுமொரு துறையில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தினை பூர்த்தி செய்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 37 | சுகாதாரமும் உடற் கல்வியும் | க.பொ.த. சாதாரண தரத்தில் சுகாதாரமும் உடற் கல்வியும் பாடத்திற்கு A சித்தியினை பெற்றிருப்பதோடு க.பொ.த. உயர்தரத்தில் யாதேனுமொரு துறையில் சித்தியடைந் திருத்தல். அத்துடன் குறைந்த பட்சம் மாவட்டம் அல்லது மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிருத்தல். அத்துடன், கல்விமாணிப் பட்டத்தினை பூர்த்தி செய்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 38 | தொடர்பாலும் ஊடகக் கற்கையும் | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர்தர) பாடமொன்றாக/ பாடத்துறையாகக் கொண்டு அதில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தின் பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாக குறித்த பாடத்தைக் கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 39 | விசேட கல்வி | க.பொ.த. உயர்தரத்தில் யாதேனுமொரு துறையில் சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்திற்கு விசேட கல்வியினை பாடமொன்றாக கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டத்தில் உரிய பாடத்திற்கான ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 40 | ஆலோசனை | கல்விமாணிப் பட்டத்திற்கு ஆலோசனை/உளவியலை பாடமொன்றாக கொண்டிருத்தல் அல்லது ஆலோசனை தொடர்பான பட்டமேற் கல்வி டிப்ளோமாவை நிறைவு செய்திருத்தல். |
| 41 | நூலக ஆசிரியர் | க.பொ.த. உயர்தரத்தில் தாய் மொழியினை பாடமொன்றாகக் கொண்டு சித்தியடைந்திருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தில் தாய்மொழியினை பிரதான பாடமொன்றாக அல்லது துணைப் பாடமொன்றாகக் கற்றிருத்தல். |

11- 296